செ.வெ.எண்:28 நாள்:18.01.2018

# பத்திரிக்கைச் செய்தி.

தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் அரியலூர் மாவட்டத்தில் அனைத்து அரசுத்துறைகள், வாரியங்கள், கழகங்கள் மற்றும் தன்னாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஆட்சிமொழிப் பயிலரங்கம், ஆட்சிமொழிக் கருத்தரங்கம் 24.01.2018 மற்றும் 25.01.2018 ஆகிய இரு நாட்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கூட்டரங்கில் நடைபெறவுள்ளது.

ஆட்சிமொழிப் பயிலரங்கம், கருத்தரங்கம் 24.01.2018, 25.01.2018 ஆகிய இரு நாட்கள் காலை 10.00 மணி முதல் மாலை 05.45 வரை நடைபெறுகிறது. மேலும், தமிழ் வளர்ச்சித்துறையால் வழங்கப்பட்டு வரும் அம்மா மென்தமிழ்ச் சொல்லாளர் மென்கொருளின் பயன்பாடு குறித்தும், பயன்படுத்தும் முறை குறித்தும் அரசுப் பணியாளர்களுக்குச் செயல் விளக்க காட்சியரை வழங்கி அம்மென்பொருள் (குறுநீதகடு) அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்படவுள்ளது. 25.01.2018 பிற்பகல் 03.00 மணி முதல் ஆட்சிமொழிக் கருத்தரங்கம் தமிழ் வளர்ச்சி இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலரின் பயிலரங்கத் தொடக்க உரையைத் தொடர்ந்து பயிலரங்கில் 1.ஆட்சிமொழி வரலாறுச் சட்டம், 2.ஆட்சிமொழிச் செயலாக்க அரசாணைகள், 3.மொழிபெயர்ப்பு கலைச்சொல்லாக்கம், 4.அலுவலக் குறிப்புகள், வரைவுகள், செயல்முறை ஆணைகள் தயாரித்தல், 5.மொழிப்பயிற்சி, 6.ஆட்சிமொழி ஆய்வுக்குறைகளைவு நடவடிக்கைகளும் ஆகிய ஆறு தலைப்புகளில் தமிழ் வளர்ச்சித்துறை துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர் பயிற்சி அளிக்கவுள்ளார்கள்.

25.01.2018 பிற்பகல் நடைபெறும் கருத்தரங்கில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையுரையாற்றவும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்க விளக்கவுரை ஆற்றவும் உள்ளனர். ஆட்சிமொழிக் கருத்தரங்கம் குறித்து அரசு அலுவலர்கள், தமிழறிஞர்கள் கருத்துரை வழங்கவுள்ளனர்.

அரசு அலுவலகங்களில் தமிழ் ஆட்சிமொழிச் செயலாக்கத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அரசு அலுவலர்கள், பணியாளர்கள் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் (பொ) முனைவர் க.சிவகாமி அவர்கள் செயல்படுவார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.